174 74

THE TEACHING OF TAMIL TO CHILDREN

தமிழ்
பால போதனா முறை

963

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - JUL 1940
MADRAS

BY

K. S. APPASWAMI AYYAR,
Retired District Educational Officer.

CHANDRA PUBLISHING HOUSE
MYLAPORE :: MADRAS

தமிழ்
பாலபோதனுமுறை

1005
973
371.3
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - JUL 1940
MADRAS

K. S. அப்பாஸ்வாமி ஐயர்
(Retired District Educational Officer)
இயற்றியது

சந்திரா பிரசுர ஆலயம்
மயிலாப்பூர் : : சென்னை.

காபிரைட்] 1940 [விலை 6 அணு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - JUL 1940
MADRAS

பொருளடக்கம்

முதல் பாகம்

போதனமுறை விளக்கம்

அத்தியாயம்		பக்கம்
1.	அக்ஷர போதனை - ஓர் புதிய முறை	1
2.	தமிழ் எழுத்தமைப்பும் தமிழுக்கேற்ற முறையும்	2
3.	இங்கிலீஷ் எழுத்தமைப்பும் இங்கிலீஷுக் கேற்ற முறையும்	3
4.	பழைய கால அக்ஷரமுறை	6
5.	புதிய முறையின் முதல்படி - படத்தைப் பார்த்து வாசித்தல்	7
6.	2-ஆம்படி - வார்த்தையைப் பார்த்து வாசித்தல்	9
7.	3-ஆம்படி - வார்த்தையை ஒலி பிரித்தல்	10
8.	4-ஆம்படி - எழுத்துகளை கற்றுக் கொள்ளல்	11
9.	5-ஆம்படி - சேர்க்கை எழுத்துகளைப் பிரித்தல்	12
10.	6-ஆம்படி - எழுத்துகளைச் சிறு அட்டவணைகளாகத் தொகுத்தல்	14
11.	அப்பியாச பாடங்கள்	18
12.	வட மொழி எழுத்துகள்	19
13.	எழுதப் பழகுதல் - முதல் படி உருவமைத்தல்	20

அத்தியாயம்		பக்கம்
14.	எழுதப் பழகுதல் - 2-ஆம்படி விரலால் வரைதல்	... 21
15.	எழுதப்பழகுதல், 3-ஆம்படி - எழுதுதல்	... 23
16.	நன்ருய் வாசிக்கப் பழகுதல்	... 24
17.	அர்த்தஞானம்	... 27
18.	பேச்சுத்திறமை	 29
19.	உபகரணங்கள்	... 32

இரண்டாம் பாகம்

ஆனந்த வாசக விளக்கம்

20.	வாசக பக்கங்கள் (5-10) படங்களைப்பற்றிய சம்பாஷணை	... 33
21.	வாசக பக்கங்கள் (11-23) வார்த்தைகளும் எழுத்துகளும்	... 37
22.	வாசக பக்கங்கள் (24-31) அப்பியாச பாடங்கள்	... 42
23.	வாசக பக்கங்கள் (32-48) இலக்கிய பாடங்கள்	... 43

தமிழ்
பால போதன முறை

முதல் பாகம்.

அத்தியாயம் 1

அக்ஷர போதனை - ஓர் புதிய முறை

1. சுற்றில்லாத நேர் வழி: தமிழ் எழுத்துகளை வெகு சுலபமாய்க் கற்பிக்கும்படியான ஓர் முறை இப்புஸ்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. சுற்று வழிகள் பல, நேரானவழி ஒன்று, என்றுண்டல்லவா? இப்புஸ்தகத்தில் காட்டப்பட்டுள்ளது சுற்றேயில்லாத நேர்வழி.

2. இப்புதிய முறையைப்பற்றிய சில குறிப்புகள்:

(i) பிரித்துக்காட்டி விளக்குதல் (Analysis) - கற்பிக்கும் ஒவ்வொரு வார்த்தையையும் அதிலுள்ள எழுத்துகளையும் எவ்வளவுவரை பிரித்துக் காட்டமுடியுமோ, அவ்வளவுவரை பிரித்துக்காட்டி விளக்குவது, இம்முறையின் ஒரு முக்கிய பாகம்.

(ii) சில எழுத்துகளை உண்டுபண்ணிக் காட்டுதல் (Synthesis): வந்த சில எழுத்துகளைக்கொண்டு, அவைகளின் மாறுதல்களான வேறு சில எழுத்துகளை உண்டு பண்ணிக் காட்டுதல், இம் முறையின் இன்னொரு பாகம்.

(iii) சொற்ப வார்த்தைகளைக்கொண்டே எல்லா எழுத்து களையும் போதித்தல்: சுமார் முப்பது சிறிய வார்த்தைகளை மூலமாக வைத்துக்கொண்டு, பிரித்துக் காட்டல், உண்டாக்கு தல் என்ற இருமுறைகளால், 12 உயிரெழுத்துகள், 18 மெய் யெழுத்துகள், 216 உயிர்மெய்யெழுத்துகள் ஆகிய இத்தனை எழுத்துகளும் இம்முறையில் சுலபமாய்க் கற்பிக்கப்படுகின் றன.

(iv) போதன பாடங்களுக்குப் பின் அப்பியாச பாடங் கள்: மேலே கண்ட விதங்களில் எல்லா எழுத்துகளையும் விளக்கிக் காட்டிய பிறகு, சில அப்பியாச பாடங்களால் அறி வைத் திடப்படுத்துவது இம்முறையின் கடைசியான பாகமாகும்.

அத்தியாயம் 2

தமிழின் எழுத்தமைப்பும் தமிழுக்கேற்ற முறையும்

1. தமிழிலுள்ள மூல அக்ஷரங்கள்: அ, இ, ஈ, உ, எ, ஐ, ஒ என்ற 7 உயிரெழுத்துகளையும், அகர மேறிய க, ங, ச,...ற, ன ஆகிய 18 உயிர்மெய்யெழுத்துகளையும், தமிழிலுள்ள மூல அக்ஷரங்கள் என்னலாம்.

2. தமிழிலுள்ள சேர்க்கை அக்ஷரங்கள்: 12 உயிர் + 18 மெய் + 216 உயிர்மெய், ஆக 246 அக்ஷரங்களில், மேலே குறிப்பிட்ட 25 அக்ஷரங்கள் போக, பாக்கி 221 அக்ஷரங் களும் சேர்க்கை அக்ஷரங்களாகும்.

3. சேர்க்கை அக்ஷரங்களை விளக்கும் முறை: ஒரு வார்த்தையில் வரும் சேர்க்கை அக்ஷரங்கள் ஒவ்வொன்றை யும் பற்றி, அது எந்த மூல அக்ஷரத்தின் எம்மாதிரியான

மாறுதல் என்பதைப்பிள்ளைகளுக்கு முதல் முதற் கொண்டே விளக்கிக்கொண்டு போகவேண்டுமென்பது இப் புதுமுறையின் கருத்து.

4. தமிழ் கிரமமாக எழுதப்படுகிற பாஷை:

(i) சில அன்னிய பாஷைகளில் ஒரே எழுத்துக்குச் சில வார்த்தைகளில் ஒரு ஒலியும், மற்றும் சில வார்த்தைகளில் முற்றும் மாறின வேறு ஒலியும் இருக்கின்றன. அப்படிக்கின்றித் தமிழ்ப்பாஷையில் இந்த எழுத்துக்கு இன்ன ஒலி என்று ஏற்பட்டுள்ளது.

(ii) ஆகவே அக்ஷரங்களையும் அவைகளின் ஒலிகளையும் கற்பித்துவிட்டால், எந்தச் சிறிய வார்த்தைகளையும் பிள்ளைகள் சுலபமாய் வாசிப்பார்கள்.

5. தமிழ் அக்ஷராப்பியாச முறையில் வார்த்தைகளில் தொடங்கினாலும், அக்ஷரங்களைக் கற்பிப்பதே நமது நோக்கம்: நாம் வார்த்தைகளைக் காட்டிப் போதித்த போதிலும், நமது நோக்கம் அக்ஷரங்களைக் கற்பிப்பதேயாகும். இவ்விஷயத்தில் தமிழைக் கற்பிப்பதற்கும் இங்கிலீஷைக் கற்பிப்பதற்குமுள்ள வேற்றுமை அடுத்த அதிகாரத்தில் விளக்கப்படும்.

அத்தியாயம் 3

இங்கிலீஷின் எழுத்தமைப்பும் இங்கிலீஷுக்கு ஏற்ற முறையும்

1. இங்கிலீஷிலுள்ள அக்ஷரங்கள்: தமிழில் 25 மூல அக்ஷரங்களுள்ளனவென்று சொல்லப்பட்டது. இங்கிலீஷிலோ மொத்தமாயுள்ளதே 26 அக்ஷரங்கள் தான்.

2. ஆனல் ஒரே எழுத்துக்குப் பல ஒலிகளுண்டு : (i) இங்கிலீஷில் அக்ஷரங்கள் சொற்பமாயிருப்பதால், அப் பாஷையை வாசிக்கக் கற்பிப்பது சுலபமான காரியமென்று எண்ணவேண்டாம்.

(ii) ஒரே எழுத்துக்குப் பல வார்த்தைகளில் பல்வேறு ஒலிகளுண்டு.

Cat - City - Cக்கு வெவ்வேறு ஒலிகள்.

Pot, Home, Love - Oக்கு வெவ்வேறு ஒலிகள்

Enough, Though, Thought - Ough க்கு வெவ் வேறு ஒலிகள்.

3. எழுத்துகளைத் தெரிந்துகொண்டால் மாத்திரம் என்ன பயன்? : இப்பேர்ப்பட்ட பாஷையில் எழுத்துகளைத் தெரிந்துகொண்டால் மாத்திரம் போதுமா? அந்த அறிவைக் கொண்டு, ஒரு வார்த்தையைப் பார்த்த மாத்திரத்தில் வாசிக்க முடியுமா?

4. இங்கிலீஷ் பாஷையின் உச்சரிப்பு அகராதிகள் : (i) சில இங்கிலீஷ் வார்த்தைகள் எழுதியுள்ளது ஒரு மாதிரியும் உச்சரிக்கவேண்டியது மற்றொரு மாதிரியும் இருப்பதாலும், இன்னஎழுத்துக்கு எல்லாவார்த்தைகளிலும் இன்னஒலிதான் என்று சொல்ல முடியாமலிருப்பதாலும், இங்கிலீஷில் உச்சரிப்பகராதி (Pronouncing Dictionary) என்ற உச்சரிப்பைக் காட்டும் அகராதி ஏற்பட்டுள்ளது.

(ii) சாதாரணமாய் எந்த இங்கிலீஷ் அகராதியிலும் வார்த்தைகளுக்குப் பின் அவைகளை உச்சரிப்பது எப்படி என்று காண்பித்திருப்பதைப் பாருங்கள்.

5. வார்த்தை வார்த்தையாய் வாசிக்கக் கற்பிக்கவேண்டிய பாஷை : எழுத்துகளைக் கற்றுக்கொண்டால் வார்த்தை

களை வாசிக்கலாம் என்று சொல்ல முடியாதாகையால், நூற்றுக்கணக்கான வார்த்தைகளை வார்த்தை வார்த்தையாய்க் கற்றுக்கொண்ட பிறகுதான், இப்பாஷையைச் சரியாய் வாசிக்கும் முறை விளங்கும்.

6. இங்கிலீஷ் ஆரம்பமுறையில் வார்த்தைகளைக் கற்பிப்பதே நோக்கம்: இங்கிலீஷைக் கற்பிக்கத் தொடங்குகையில் வார்த்தைகளைக் கற்பிப்பதே முக்கிய நோக்கமே தவிர, அவ்வார்த்தைகளிலுள்ள அக்ஷரங்களையும் அவைகளின் ஒலிகளையும் பற்றிப் போதிப்பது முக்கிய நோக்கமல்ல. அக்ஷரங்களைப்பற்றின ஒலிப்பாடங்கள் எடுத்தவுடனே கற்பிக்கப்படுவதில்லை. அக்ஷரங்களின் ஒலிகள் அதிகப் பழக்கத்தின்மேல் பிள்ளைகளுக்கு விளங்கும்.

7. இங்கிலீஷுக்கு ஏற்ற முறை: ஆங்கில ஆசிரியர்கள், முழு வாக்கியங்களில் தொடங்கி, அவைகளை எழுதிக் காட்டி, அவைகளிலுள்ள வார்த்தைகளைப் படிக்கவும் எழுதவும் கற்பித்துக்கொண்டு போகிறார்கள். வாக்கியத்திலிருந்து வார்த்தைகள், வார்த்தைகளிலிருந்து அக்ஷரங்கள், இந்த வரிசையில் போவது இங்கிலீஷ் பாஷைக்கு ஏற்ற முறையாகும்.

8. இங்கிலீஷ் முறையை அப்படியே அனுசரிப்பது தமிழ் பாஷைக்கு ஏற்றதல்ல: இங்கிலீஷ் முறையிலிருந்து சில சிறந்த பாகங்களை மாத்திரம் உபயோகிக்கவேண்டுமே யொழிய, அம்முறையை அப்படியே நாம் அனுசரிப்பது தவறாகும்.

அத்தியாயம் 4

பழைய கால அக்ஷர முறை

1. எடுத்தவுடனே அக்ஷரங்களைக் கற்பித்தல்: நம்முடைய பழைய கால முறையில், எடுத்தவுடனே அக்ஷரங்களை ஒன்றன்பின் ஒன்ருகக் கற்பித்துக்கொண்டே போனுர்கள். இந்த முறையில் (The Alphabetic Method) எழுத்துகளெல்லாவற்றையும் வரிசைக் கிரமமாகக் கற்பித்த பிறகே, வார்த்தைகளை வாசிக்கக் கற்பித்தார்கள்.

2. இம்முறையின் நோக்கம்: பிள்ளைகள் முதலில் சிரமப்பட்டு அக்ஷரங்களைக் கற்றுக்கொண்டால், பிறகு கற்றுக்கொண்டதை உபயோகித்து வார்த்தைகளை வாசிக்கலாம் என்பது இம்முறையின் நோக்கம்.

3. இம்முறை பாலர்களுக்கு ஏற்றதல்ல: தினந்தினம் எதற்காக எழுத்துக்கப்புறம் எழுத்தாகக் கற்றுக்கொண்டே போகவேண்டுமென்று பாலர்களுக்கு விளங்காது. கைகண்ட பலன் இல்லாத ஒரு வேலையில் பாலர்களுக்கு ருசி ஏற்படாது, சிரத்தை உண்டாகாது. வார்த்தைகளையே கற்பிக்காமல் அக்ஷரங்களையே கற்பித்துக்கொண்டு போவது குழந்தைகளுக்கு ஏற்ற முறை யாகாது.

4. இம்முறை பெரியவர்களுக்காயினும் ஏற்றதா? ஒரு வழியாய் எழுத்துகளை யெல்லாம் செவ்வையாய்க் கற்றுக்கொண்டு, பிறகு வாசிக்க ஆரம்பிப்பது பெரியவர்களுக்காயினும் ஏற்ற முறையா? என்பது ஒரு கேள்வி. அவர்களுக்குக்கூட இம்முறை அலுப்பாக விருக்கும். நாம் புதிதாய் ஒரு பாஷையை வாசிக்கக் கற்றுக்கொள்ளும்போது, முதலில் தினந்தினம் எழுத்துகளை எழுதிக்கொண்டே போவது சுலபமாயிருக்குமா? அல்லது, எழுத்துகளை இரண்

டொருதரம் பார்த்து ஒருவாறு அவைகளின் உருவங்களை மனதில் வாங்கிக்கொண்டு, வார்த்தைகளை வாசிக்கத் தொடங்குவது சுலபமாயிருக்குமா? வார்த்தைகளை வாசிக்கும்போது மனதிற்கு அர்த்தமாகிறது, மனதில் ஒரு ஆனந்தம் உண்டாகிறது. எழுத்துகளைத் தனியே கற்றுக்கொள்ளும்போது அர்த்தமேது? ஆனந்தமேது? பெரியவர்களுக்குங்கூட வார்த்தைகள் சம்பந்தமாயே ஆரம்பக்கல்வி இருக்கவேண்டும். சுத்த அக்ஷரமுறை பெரியவர்களுக்குக்கூட கடினமானது, பாலாகளுக்கு ஏற்றதேயல்ல.

அத்தியாயம் 5

புதிய முறையின் முதல் படி - படத்தைப் பார்த்து வாசித்தல்

1. படத்தைப் பார்த்துப் பெயரைச் சொல்லுதல் :

(i) எழுத்துகளைக் காட்டி இது அ, இது ஆ...இது க, இது கி, இது கு...என்று கற்பிப்பது பிறகு ஆகலாம்.

(ii) வார்த்தைகளைக் காட்டி, இது கிளி, இது எலி, இது அணில், இது குதிரை, என்று வார்த்தைகளைக் காண்பித்து மொத்தமாய்க் கற்பிப்பதும் பிறகு ஆகலாம்.

(iii) படங்களைப் பார்த்து, இது அணில், இது கிளி, என்று பிள்ளைகள் சொல்வதே வாசிப்பின் முதல் படி.

2. வார்த்தைப் படங்கள் : கற்பிக்க வேண்டிய வார்த்தைகளையே இவ்வாறு படங்கள் மூலமாய்க் காட்டவேண்டும். பட வாசிப்பில் ஆரம்பித்து, அடுத்தபடியாக வார்த்தை வாசிப்புக்குப் போகவேண்டும். ஆகையால் என்னென்ன வார்த்தைகளை வாசிக்கவும் எழுதவும் பிறகு கற்பிக்கப் போகிறோமோ அந்த வார்த்தைகளையே இப்பொழுது படத்தைப் பார்த்துப் பிள்ளைகள் பெயர்களாகச் சொல்லவேண்டும்.

3. இம்முறையின் கருத்து: (i) முதலில் அணிலின் படத்தைப் பார்த்துப் பிள்ளைகள் அணில் என்ற வார்த்தையைச் சொல்லட்டும். பிறகு அணில் என்று அச்சிட்டிருப்பதைப் பார்த்து அணில் என்று சொல்வார்கள்—என்பது இம்முறையின் கருத்து.

(ii) வார்த்தையிலிருந்து எழுத்துகளைக் கற்பிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டதல்லவா? படத்திலிருந்து வார்த்தையையும், வார்த்தையிலிருந்து எழுத்துகளையும் கற்பிப்பது இம்முறையின் கருத்து.

4. பட வாசிப்பு: (i) நாம் எழுதி யிருப்பதைப் பார்த்து வாசித்து ஆனந்தம் அடைகிறமாதிரி, பாலர்கள் படங்களைப் பார்த்துப் பெயர்களைச் சொல்லி ஆனந்திப்பார்கள்.

(ii) படங்களும் அவைகளுக்குக் கீழ் அச்சிடப்பட்ட பெயர்களும் உள்ள புஸ்தகமே பாலர்களுக்கு ஏற்ற புஸ்தகமாகும். படங்களைப்பார்த்துப் பெயர்களைச் சொல்லுதல் என்பதே, பாலர்களுக்கு முதல் வாசிப்புப் பாடமாகும். படவாசிப்பே பாலர்களின் முதல் வாசிப்பு.

5. படங்களைப் பற்றிய சம்பாஷணை: படங்களின் பெயர்களைச் சொல்லச் செய்வதுதான் வாசிப்பு சம்பந்தமான உத்தேசமென்றாலும் அதோடு நிற்கக்கூடாது. படங்களைக் கவனித்துப்பார்க்கும்படி பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டும். பல கேள்விகளைக்கேட்டுப் பிள்ளைகளிடமிருந்து விடைகளை வரவழைக்கவேண்டும். ஒவ்வொரு படத்தின்பேரிலும் பிள்ளைகளுடன் தாராளமாய்ச் சம்பாஷிக்கவேண்டும்.

அத்தியாயம் 6

2 ஆம் படி - வார்த்தையைப் பார்த்து வாசித்தல்

1. வார்த்தைகளைப் பார்த்துப் பெயர்களைச் சொல்லுதல்: இது வரையில் பிள்ளைகள் படத்தைப் பார்த்துப் பெயரைச் சொன்னார்கள். இப்பொழுது படத்தின் கீழ் அச்சிட்டுள்ள வார்த்தையைப் பார்த்துப் பெயரைச் சொல்லத் தெரிந்துகொள்ளவேண்டும்.

2. மொத்தமாய்ப் பார்ப்பது: அணில், ஆணி, இலை, ஈட்டி, என்ற 4 படங்களும், 4 வார்த்தைகளும் புஸ்தகத்தில் அச்சிட்டிருந்தால், அவைகளைக் கவனித்து பிள்ளைகள் இது இன்ன வார்த்தை யென்று மொத்தமாய் அறிந்து கொள்ள முடியும்.

3. சிற்சில அடையாளங்களால் அறிவது: படங்களையும் வார்த்தைகளையும் தனித்தனியாகக்கொடுத்து அந்தந்தப் படத்தின் கீழ் அதற்குச் சரியான வார்த்தையை வைக்கச் சொன்னால், பிள்ளைகள் கவனத்துடன் வார்த்தைகளைப் பார்ப்பார்கள். முதலெழுத்துகளைப் பார்த்துக்கொண்டே வார்த்தையை இன்னதென்று சிலர் தெரிந்துகொள்வார்கள், அல்லது வேறு சில அடையாளங்களால் ஒவ்வொரு வார்த்தையையும் இன்னின்னதென்று அறிந்துகொள்வார்கள்.

4. எதுமாதிரி இருக்கிறது என்று பார்த்துச் சொல்வது: இலை என்கிற வார்த்தையை எழுதிக்காட்டிப் புஸ்தகத்தில் அச்சிட்ட எந்த வார்த்தை மாதிரி இது இருக்கிறது, என்று கேட்கலாம்.

5. எழுத்துக் கோர்ப்பது: அணில், ஆணி, இலை, ஈட்டி என்பதிலுள்ள 10 எழுத்துகளையும் கொடுத்து, அவ்

வார்த்தைகள் மாதிரிக் கோர்த்துவைக்கச் சொன்னுல், வார்த்தைகளின் பாகங்களாகிய எழுத்துகளைக் கவனித்து இந்த வேலே செய்யவேண்டிவரும்.

6. இந்த மாதிரி அப்பியாசங்கள் அதிகமாக அவசிய மில்லே : அடுத்த 2 படிகளில்—3-ம் படியிலும் 4-ம் படியிலும் வார்த்தையைப் பிரித்துக்காட்டிக் கற்பிக்கப் போகிறபடியால் இந்தப்படியின் சம்பந்தமாய் அதிகமான அப்பியாசங்கள் அவசியமில்லே. இருந்தபோதிலும் வேடிக்கையாகவும் கவன சக்தியை உபயோகிக்கச் செய்யவும், மேலே கண்ட அப்பி யாசங்களைப் பிள்ளைகளுக்குக் கொடுக்கலாம்.

அத்தியாயம் 7

3-ஆம் படி - வார்த்தையை ஒலி பிரித்தல்

1. இது ஒரு வாய்மொழிப் பாடம் : (i) ஒவ்வொரு வார்த்தையின் ஒலியையும் வாயால் சிற்றெலிகளாகப் பிரிக்கக் கற்பிப்பது இப்பாடத்தின் நோக்கம்.

2. எழுத்துமுறைக்கு ஒத்த ஒலிப்பிரிவினை : (i) மெய் யொலி வரும்போது, அதற்குப் பிறகு வரும் உயிர்மெய் யோடு சேர்த்துச் சொல்லாமல், அந்த மெய்யொலியைத் தனி யாகப் பிரித்துச்சொல்லவேண்டும்.

(ii) குறில் நெடில் ஒலிகளை நன்ருகக் குறுக்கியும் நீட்டியும் உச்சரிக்கச் சொல்லவேண்டும்.

3. உதாரணங்கள் : (i) பட்டம் என்பதைப் பிள்ளை கள் முதலில் ப - டம் என்று சொல்லலாம். ப, ட், ட, ம் என்று 4 சிற்றெலிகளாகப் பிரிக்கக் கற்பிக்கவேண்டும்.

(ii) பாப்பா என்பதை, ப, ப என்று பிள்ளைகள் சொல்லிவிடலாம். பா (நீட்டி), ப், பா (நீட்டி), என்று இரண்டு நெடில்களையும் நீட்டியும், நடுவிலுள்ள மெய்யொலியைப் பிரித்தும் சொல்லக் கற்பிக்கவேண்டும்.

அத்தியாயம் 8

4-ஆம் படி - எழுத்துகளைக் கற்றுக்கொள்ளல்

1. எழுத்துகளும் அவைகளின் ஒலிகளும்: அணில் என்ற வார்த்தையை 3 சிற்றொலிகளாக வாயால் பிரிக்கக் கற்றுக்கொண்டபின், அ - ணி - ல் - என்ற 3 எழுத்துக்களையும் தனித்தனியாகக் காண்பித்து, முதல் சிற்றொலி அ என்ற எழுத்தாலும், 2 ஆம் சிற்றொலி ணி என்ற எழுத்தாலும் 3 ஆம் சிற்றொலி ல் என்ற எழுத்தாலும், குறிக்கப்படுகிறது என்று கற்பிக்கவேண்டும்.

2. ஈரடையாள எழுத்துகளும் மூவடையாள எழுத்துகளும்: (i) மாடு என்று எழுதியுள்ளதில் ம என்ற எழுத்தும் ா என்று கால் வாங்கினதும் சேர்ந்து ஒரே எழுத்து என்பதைக் கற்பிக்கவேண்டும். ஔ என்ற எழுத்தில் இரண்டு அடையாளங்களுமாகச் சேர்ந்து ஒரே எழுத்து என்பதையும், கெ, கே என்பவை 2 அடையாளங்கள் சேர்ந்த எழுத்துகள் என்பதையும் சொல்லவேண்டும்.

(ii) கோயில் என்று எழுதியுள்ளதில் கோ, 3 அடையாளங்கள் சேர்ந்த ஒரு எழுத்து என்பதையும், வௌவால் என்பதில் வௌ, 3 அடையாளங்கள் சேர்ந்த ஒரு எழுத்து என்பதையும், சொல்லவேண்டும்.

அத்தியாயம் 9

5-ஆம் படி - சேர்க்கையெழுத்துகளைப் பிரித்தல்

1. சேர்க்கை எழுத்து என்றால் என்ன?

அணில் என்ற வார்த்தையில் அ என்பது ஒரு மூல எழுத்து, ணி என்ற எழுத்தும் ல் என்ற எழுத்தும் சேர்க்கை எழுத்துகள். அவைகளுக்கு ண வும் ல வும் மூல எழுத்துகள். ஏனெனில், ண என்பதின் மேல் ி என்று விசிறினால் ணி ஆகிறது. ல என்பதின்மேல் புள்ளி குத்தினால், ல் ஆகிறது.

2. மூல ஒலி வேறு, மூல எழுத்து வேறு:

(i) ணி என்ற ஒலிக்கு, மூல ஒலி ண் என்ற மெய். ண் என்ற மெய்யொலியின் மேல், இ என்ற உயிர் ஏறுவதால், ணி என்ற உயிர்மெய்யொலி உண்டாகிறது.

(ii) ஆனால் ணி என்ற எழுத்துக்கு மூல எழுத்து ண என்ற எழுத்து. ண உருவத்தின்மேல் ி என்ற விசிறி அடையாளமிடுவதால், ணி உருவம் உண்டாகிறது.

(iii) இவ்விரண்டு விஷயங்களையும் சேர்த்து, நன்னூலாசிரியர்.

புள்ளிவிட்டவ்வொடு முன்னுருவாகியும்,
ஏனையுயிரொடுருவு திரிந்தும்,

என்று கூறியுள்ளார்.

ஒலியின் மூலம் விசாரிக்கும்போது, மெய்யின் ஒலி மூலவொலியென்றும், எழுத்தின் மூலம் விசாரிக்கும்போது, அகரவுயிர்மெய்யெழுத்து முன்னுருவென்றும் அறியத் தக்கது.

3. சேர்க்கை எழுத்துகளைக் கற்பிக்கும் முறை:

(i) ணி என்ற எழுத்தும், ல் என்ற எழுத்தும் வந்ததும், அவைகளின் ஒலிகள் ணி, ல் என்று கற்பிப்பதோடு நிற்கக்கூடாது.

(ii) ண என்ற எழுத்தின் மேல் விசிறினால் ணி ஆகிறது என்பதையும், ல என்ற எழுத்தின்மேல் புள்ளி குத்தினால் ல் ஆகிறது என்பதையும் பிள்ளைகளுக்குக் காட்ட வேண்டும்.

4. இம்முறையினால் ஒரு எழுத்தைக்கொண்டு 2 எழுத்துகளையும் ஒரு அடையாளத்தையும் கற்பிக்கிறோம்: (i) இம்முறையினால், ணி என்ற எழுத்தைக்கொண்டு ண, ணி என்ற 2 எழுத்துகளைக் கற்பிக்கிறோம். தவிர ி என்ற விசிறி அடையாளத்தையும் கற்பிக்கிறோம்.

(ii) அதே மாதிரி ல் என்ற எழுத்தைக்கொண்டு, ல, ல் என்ற 2 எழுத்துகளையும் புள்ளி அடையாளத்தையும் கற்பிக்கிறோம்.

5. ணி, ல் என்ற 2 எழுத்துகளைக் கொண்டு கற்பிக்கக் கூடிய எழுத்துகள்:

(i) இப்பொழுது ண, ல என்ற 2 மூல எழுத்துகளும் புள்ளி விசிறி என்ற 2 அடையாளங்களும் தெரியுமல்லவா?

(ii) ண என்ற எழுத்தின்மேல், புள்ளி குத்தினால், ண் என்றும், விசிறினால், ணி என்றும், ஆகின்றனவென்று கற்பிக்கலாம்.

(iii) அதேமாதிரி ல என்ற எழுத்தின்மேல், புள்ளி குத்தினால் ல் என்றும், விசிறினால் லி என்றும், ஆகின்றனவென்று கற்பிக்கலாம்.

(iv) ஆகவே

ண். ண, ணி ல், ல, லி	என்ற 6 எழுத்துகளைக் கற்பிக்கலாம்.

(v) இவ்வாறு, பிள்ளைகளுக்கு உருவமாறுதல்களையும், ஒலி மாறுதல்களையும், விளக்க வேண்டுமென்பது நமது முறையின் கருத்து.

அத்தியாயம் 10

6-ம் படி - எழுத்துகளைச் சிறு அட்டவணைகளாகக் கோர்த்தல்

1. உயிரேழுத்துகளைக் கற்பித்தல்: ஒவ்வொரு உயிரெழுத்தையும் முறையே முதலெழுத்தாகவுடைய 12 வார்த்தைகளைக் கொண்டு, உயிரெழுத்துகளைக் கற்பிக்கவேண்டும். பிறகு உயிரெழுத்தட்டவணையைப் பார்த்துப் பிள்ளைகள் வாசிக்கலாம்.

2. மற்ற எழுத்துகளைக் கற்பித்தல்:

(i) வார்த்தைகளின் பாகங்களாகவே உயிரெழுத்துகளைக் காட்டிக் கற்பித்தமாதிரி, 18 மெய்யெழுத்துகளையும் 216 உயிர்மெய்யெழுத்துகளையும் கற்பிக்க முடியாது.

(ii) உயிர் மெய்யெழுத்து அட்டவணையில் $18 \times 12 = 216$ உயிர்மெய்யெழுத்துகளுக்கு ஸ்தானங்கள் இருக்கின்றனவே ஒழிய, அவைகளில் சில எழுத்துகள் எந்த வார்த்தைகளிலும் வருகிறதில்லை.

(iii) மேலும் வார்த்தைகளிலிருந்துதான் ஒவ்வொரு எழுத்தையும் கற்பிக்க வேண்டுமென்று எண்ணுவது தப்பு.

3. வந்த எழுத்துகளிலிருந்து அவ்வரிசையிலுள்ள மற்ற எழுத்துகளைக் கற்பித்தல் : (i) முந்திய அதிகாரத்தில் ணி என்ற ஒரு எழுத்து வந்ததும், அதைக்கொண்டு, ண், ண, என்ற எழுத்துகளையும் கற்பிக்கலாமென்று விளக்கப்பட்டிருக்கிறது.

(ii) ஆனால் ஒரேயடியாய் ண் என்ற மெய்யையும், ண முதல் ணௌ வரை 12 உயிர்மெய்களையும் கற்பிக்கமுடியாது. அப்படிக் கற்பிக்க முயன்றால், பிள்ளைகளுக்கு ருசிக்காது, தெளிவாய் விளங்காது.

(iii) சி என்ற எழுத்து வந்தால், அவ்வெழுத்தைக் கற்பிப்பதோடு, ச் என்ற மெய்யெழுத்தையும் ச வரிசையில் சில உயிர்மெய்களையும் கற்பிக்கலாம். ச், ச, சா, என்ற 3 எழுத்துகளை மாத்திரமாவது அல்லது ச், ச, சா, சி, சீ, என்ற 5 எழுத்துகளை மாத்திரமாவது கற்பித்தால், பிள்ளைகளுக்குச் சுலபமாகவிருக்கும்.

(iv) இவ்வாசிரியருடைய ஆனந்த முதல் வாசகம் என்ற புஸ்தகத்தில் போடப்பட்டுள்ள சிறிய அட்டவணைகள் பின்வருமாறு.

4. உயிர்மெய்களின் முதல் 2 வரிசைகள் :—

வந்த எழுத்துகள் : ட், ட; ப், ப, பா ; ம்.

அட்டவணை :

ட்	ட	டா
ப்	ப	பா
ம்	ம	மா

பிள்ளைகள், ட் ட டா, ப் ப பா, ம் ம மா என்று வேடிக்கையாகச் சொல்லிக்கொண்டு, இந்த அட்டவணையைக் கற்றுக்கொள்வார்கள்.

5. உயிர்மெய்களின் முதல் 4 வரிசைகள் :—

(i) வந்த எழுத்துகள் : சி, ஞ், ணி, ல்

அட்டவணை :

ச்	ச	சா	சி	சீ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ
ண்	ண	ணா	ணி	ணீ
ல்	ல	லா	லி	லீ

பிள்ளைகள் பிராசத்துடன் ச் ச சா சி சீ, ஞ் ஞ ஞா ஞி ஞீ, என்று சொல்லிக்கொண்டு அட்டவணையைக் கற்றுக் கொள்வார்கள்.

(ii) வந்த எழுத்துகள் : க, ங, ன், வை

அட்டவணை :

க்	க	கா	கி	கீ
ங்	ங	ஙா	ஙி	ஙீ
ன்	ன	னா	னி	னீ
வ்	வ	வா	வி	வீ

(iii) வந்த எழுத்துகள் : த், ர, ற்,

அட்டவணை :

த்	த	தா	தி	தீ
ர்	ர	ரா	ரி	ரீ
ற்	ற	றா	றி	றீ

(iv) வந்த எழுத்துகள் : ங, ய, ள, ழ

அட்டவணை :

ங	ஙா	ஙி	ஙீ
ய	யா	யி	யீ
ள	ளா	ளி	ளீ
ழ	ழா	ழி	ழீ

6. உயிர் மெய்களின் நடு 4 வரிசைகள் :—18 மெய்களுக்கும் முதல் 4 வரிசை உயிர்மெய்களைக் கற்பித்தபிறகு நடு 4 வரிசை உயிர்மெய்களைக் காட்டும் ஒரு அட்டவணையைக் கற்பிக்கலாம்.

கு,	கூ,	கெ	கே
பு	பூ	பெ	பே
டு	டூ	டெ	டே
று	றூ	றெ	றே

7. உயிர்மெய்களின் கடை 4 வரிசைகள் : முடிவில் கடை 4 வரிசைகளைக் கற்பிக்கலாம்.

கை	கொ	கோ	கௌ
ரை	ரொ	ரோ	ரௌ
ளை	ளொ	ளோ	ளௌ
ணை	ணெ	ணே	ணௌ

8. இந்த 6 ஆம் படியின் கருத்து :—

(i) 216 எழுத்துகளையுள்ள உயிர்மெய்யட்டவணையை முப்பாகங்களாகப் பிரித்துப் போதிக்கவேண்டும்.

(ii) 3 அல்லது 4 மூல எழுத்துகள் மாத்திரமே ஒரு அட்டவணையில் சேர்க்கப்படவேண்டும்.

(iii) முதலில் கொஞ்ச காலத்திற்கு முதற் பாகத்தை மாத்திரம்—அதாவது அகர, ஆகார, இகர, ஈகார உயிர்மெய் களை மாத்திரமே அப்பியாசம் செய்யவேண்டும்.

(iv) இவ்வாறு ஆக்கப்பட்ட சிறு அட்டவணைகளைப் பிள்ளைகள் சுலபமாகக் கற்றுக்கொள்வார்கள்.

அத்தியாயம் 11

தமிழ் அப்பியாச முடிவு

உயிர் மெய்யெழுத்து அப்பியாச பாடங்கள்

அறிவை அப்பியாசத்தால் திடப்படுத்தல்:

1. இதுவரையில் விவரிக்கப்பட்ட 5-வது, 6-வது படிகளால், 18 × 12 = 216 உயிர் மெய்யெழுத்துகளும் சிறுகச் சிறுகப் பிள்ளைகளுக்கு விளக்கப்பட்டன.

2. அப்பியாசத்தாலேதான் அறிவு திடப்படவேண்டுமானதால், இவ்வாசிரியருடைய வாசக புஸ்தகத்தில், உயிர் மெய்யெழுத்துகளை விஸ்தாரமாய் அப்பியசிப்பதற்காக 7 அப்பியாச பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

3. அப்பியாச பாடங்களின் விவரம்: (i) அகர ஆகார உயிர்மெய்கள் (ii) இகர ஈகார உயிர்மெய்கள் (iii) உகர ஊகார உயிர்மெய்கள் (iv) எகர ஏகார உயிர் மெய்கள் (v) ஐகார உயிர்மெய்கள் (vi) ஒகர ஓகார உயிர் மெய்கள் (vii) ஔகார உயிர் மெய்கள்—என 7 பாடங்களில் உயிர் மெய்களைப்பற்றின அறிவு பூர்த்தியாகும்.

அத்தியாயம் 12
வடமொழி எழுத்துகள்

1. தமிழ் எழுத்துகளோடு சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள **5 வட மொழி எழுத்துகள் :**

ஜ, ஸ ,ஹ, ஷ, க்ஷ,—என்ற ஐந்து வடமொழி எழுத்துகள் தமிழில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளவை.

2. வடமொழிகளும் தமிழ்ப்பாஷையும் : (i) சில வடமொழிகள் தமிழில் 2 விதமாக எழுதப்படுகின்றன, பேசப்படுகின்றன. ஸூரியன், சூரியன்; புஸ்தகம், புத்தகம்; ஜுரம் சுரம்; ஹோமம், ஓமம்; இஷ்டம், இட்டம்; ரஸம், ரசம்; நக்ஷத்திரம், நட்சத்திரம்.

(ii) இரண்டு விதங்களில், எவ்விதத்தில் எழுதினாலும் சொன்னாலும் சரியென்று ஒத்துக்கொள்வதே முறை.

3. பழக்கத்தில் வந்துள்ள சுலபமான வார்த்தைகளை மாத்திரம் கற்பிக்கவேண்டும் :

(i) வடமொழி எழுத்துகளைக் கற்பிக்கவேண்டிய நிமித்தமாக அபூர்வமான வார்த்தைகளைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கக் கூடாது. பழக்கத்திலுள்ள சில வார்த்தைகளைக் கற்பித்தால் போதுமானது.

(ii) இவ்வாசிரியர் இயற்றியுள்ள வாசகபுஸ்தகத்தில் க்ஷ சம்பந்தமாய் க்ஷவரம், க்ஷேமம் என்ற 2 வார்த்தைகள் தான் கற்பிக்கப்படுகின்றன.

ஜ சம்பந்தமாய், ஜலம், நிஜம், ஜீரகம் ஜுரம் என்ற 4 வார்த்தைகளும், ஷ சம்பந்தமாய், விஷம், வேஷம், பாஷை, இஷ்டம், கஷ்டம் என்ற 5 வார்த்தைகளுந்தான் கற்பிக்கப்படுகின்றன.

அத்தியாயம் 13

எழுதப் பழகுதல்

முதல் படி—உருவமைத்தல்

1. முதலில் கற்பிக்கத் தகுந்த எழுத்துகள்:

(i) ட, ப, ம—இம்மூன்றும் முதலில் கற்பிக்கத் தகுந்த எழுத்துகள். இவைகளின் உருவங்கள் சுலபமாய் மனதில் பதியும்படியானவை, சுலபமாய் அமைக்கத் தகுந்தவை.

(ii) இக்காரணங்களால், இவ்வாசிரியர் இயற்றியுள்ள வாசகத்தில், பாப்பா, பட்டம் என்ற வார்த்தைகள் முதல் பாடத்தில் போடப்பட்டிருக்கின்றன.

2. குச்சிகளால் ட, ப, அமைத்தல்: 2 குச்சிகளால் ட என்ற உருவத்தையும், 3 குச்சிகளால் ப என்ற உருவத்தையும் பிள்ளைகளை அமைக்கச் சொல்லவேண்டும்.

3. குச்சிகளாலும் வளைவு கம்பிகளாலும் ம அமைத்தல்: 2 குச்சிகளையும், ஒரு கம்பியையும் எடுத்து, பிள்ளைகள் ம என்ற உருவத்தை அமைக்கவேண்டும்.

4. ட, ப, ம, வுக்குப் பிறகு எழுத்துகளை வரிசைக் கிரமமாகக் கற்பித்தலே நல்லது: முதல் பாடத்தில் ட, ப, ம என்று எழுத்துகள் கற்பிக்கத்தகுந்தனவே தவிர, பிறகு உள்ள பாடங்களில் எழுத்துகளை வரிசைப்படிக் கற்பிப்பதே நமது பாஷைக்கு ஏற்ற முறையாகும்.

5. ஒவ்வொரு எழுத்தையும் உருவமைத்தல்: ட, ப, ம வுக்குச் சொன்னதுபோல, மற்ற எழுத்துகளின் உருவங்களை அமைப்பதற்கும் தகுந்த மாதிரி நேரான குச்சிகளும், வளைவு கம்பிகளும் செய்து வைத்துக்கொள்ளவேண்டும். அந்தக்

குச்சிகளையும் கம்பிகளையுங்கொண்டு ஒவ்வொரு எழுத்தின் உருவத்தையும் பிள்ளைகள் உண்டாக்கவேண்டும்.

6. சிறு விதைகளால் எழுத்துகளின் உருவங்களை அமைத்தல்: (i) பெரிதாய் எழுத்துகளை எழுதி, அவைகளின்மேல் பிள்ளைகள் விதைகளையோ பருப்பையோ எழுதுகிற வழிப்படியே வைத்துக்கொண்டு போகவேண்டும்

(ii) பிள்ளைகள் 'அ' என்ற எழுத்தின்மேல் விதைகளை வைப்பதில், முதலில் ೨ என்பதின்மேல் வைக்கவேண்டுமென்றும் அடுத்தபடியாக ــ என்பதின்மேல் வைக்கவேண்டுமென்றும், கடைசியாக ┤ என்பதின் மேல் வைக்கவேண்டுமென்றும், படிப்படியாக சொல்லிக்கொடுக்க வேண்டும்.

அத்தியாயம் 14

எழுதப்பழகுதல்

2-ஆம்படி—விரலால் வரைதல்

1. வரைதல் அப்பியாசம் நமது பழைய முறையிலுள்ளது:

நமது பழைய முறையில் எடுத்தவுடனே பிள்ளைகளிடத்தில் எழுதுகோலைக் கொடுத்து எழுதச் சொல்வதில்லை. விரலால் வரைந்து பழகின பின்னரே, பிள்ளைகள் எழுத்தாணியாலோ பென்சிலாலோ எழுத ஆரம்பித்தார்கள். இது மெச்சத்தக்க சம்பிரதாயம்.

2. மணலில் வரைதலால் விரல் தேயும்:

இந்த சம்பிரதாயத்தில் ஒரு குறைவு என்னவென்றால், சுரசுரப்பான மணலின்மேல் வரைவதால் பிள்ளைகளுடைய விரல் தேயும். ஆகையால் விரல் தேயாதபடி நாம் யுக்தி செய்யவேண்டும்.

3. பள்ளங்களாகச் செதுக்கின எழுத்துகள்

மரப் பலகைகளில் எழுத்துகள் மாதிரி செதுக்கின பள்ளங்களில் பிள்ளைகள் விரலால் வரைந்து பழகுவது உப யோகமுள்ள அப்பியாசம்.

4. மேடாகச் செதுக்கின எழுத்துகள்

எழுத்துகளை மேடாகச் செதுக்கிவைத்திருந்தால், அந்த உருவங்களின்மேல் பிள்ளைகள் விரலால் வரையலாம்.

5. வர்ணத்தால் பட்டையாக எழுதியுள்ள எழுத்துகள்

பலகைகளிலோ, தகரத்தகடுகளிலோ வெள்ளை வர்ணத்தால் பட்டையாக எழுத்துகள் எழுதப்பட்டிருந்தால் அவ்வெழுத்துகளின்மேல் பிள்ளைகள் விரலால் வரையலாம்.

6. உருவங்களின்மேல் வரைதல் மிகவும் முக்கிய மான ஓர் அப்பியாசம்: அடுத்தடுத்து உருவங்களின்மேல் விரலால் வரைவதால், அவ்வுருவங்கள் பிள்ளைகள் மனதில் நன்ருய்ப் பதியும். விரலை எப்படிக் கொண்டுபோக வேண்டும், எப்படி வளைக்கவேண்டும், எப்படித் திருப்ப வேண்டும், என்பதை யெல்லாம் கைப் பழக்கத்தால் பிள்ளை கள் தெரிந்துகொள்வார்கள்.

7. வேண்டிய அளவு வரைந்து பழகின பின்னரே பிள்ளைகள் எழுதத் தொடங்கவேண்டும்.

பிள்ளைகள் வரைதல் அப்பியாசத்தை வேண்டிய அளவு செய்த பிறகே, எழுதுகோலைப்பிடித்து எழுதத் தொடங்க வேண்டும். வரைந்து கற்றுக்கொள்ளுதல் என்ற நமது பழைய சம்பிரதாயத்தை விட்டுவிடாதேயுங்கள்.

அத்தியாயம் 15

எழுதப்பழகுதல்

3 ஆம் படி — எழுதுதல்

1. பார்த்து எழுதத் தொடங்குதல்: வேண்டிய அளவு வரைதல் அப்பியாசம் ஆனபிறகு, பிள்ளைகள் பார்த்து எழுதல் என்ற அப்பியாசத்தை ஆரம்பிக்கலாம்.

2. எழுத்துகளின் பாகங்களை மாத்திரம் எழுதுதல்: (i) ப என்ற எழுத்தை எழுதுவதற்கு மேலேயிருந்து கீழே ஒரு கோடும் இடதுபுறமிருந்து வலது புறம் ஒரு கோடும், கீழேயிருந்து மேலே ஒரு கோடும், எழுத வேண்டுமல்லவா?

(ii) வ என்கிற எழுத்தில், ஒரு சுழியும், ஒரு இடது வலது கோடும், ஒரு கீழ் மேல் கோடும் சேர்ந்துள்ளன.

(iii) அ என்பதில், ஒரு வளைவும், ஒரு நீண்ட சுன்னமும், நேர்க்கோடுகளால் ஆக்கப்பட்ட ஒரு பாகமும் உள்ளன.

(iv) அவசியமென்று தோன்றினல், இவ்வாறுள்ள எழுத்துகளின் பாகங்களைத் தனித்தனியாக பிள்ளைகள் எழுதிப்பழகலாம்.

3. மூன்று முக்கிய விஷயங்கள்: (i) பிள்ளைகளிடத்தில் பெரிதாய் எழுதின எழுத்துகளையுடைய அட்டையைக் கொடுத்து, அதைப் பார்த்து எழுதச்சொல்ல வேண்டும்.

(ii) தப்பிதங்களை உபாத்தியாயர் திருத்திக் காட்ட வேண்டும்.

(iii) ஆரம்பத்தில் பிள்ளைகள் பெரிய எழுத்தாக எழுதிப் பழகவேண்டும்.

4. சரியாக எழுதுவது என்பது பழக்கத்தின் மேல் வர வேண்டிய விஷயம்: பிள்ளைகளை எழுதப் பழக்குவதில், உபாத்தியாயர்கள் வெகு பொறுமையுடன் பிள்ளைகளுக்கு உதவி புரியவேண்டும். தப்பிதங்களைத் திருத்தும்போது, குற்றஞ் சொல்கிறமாதிரி கடுமையாகச் சொல்லக்கூடாது. எழுதின மட்டும் பிள்ளைகளிடத்தில் சந்தோஷத்தைக் காண்பிக்க வேண்டும்.

அத்தியாயம் 16

நன்றாய் வாசிக்கக் கற்பித்தல்

1. எழுத்துகளைக் கற்பித்ததனால் மாத்திரம் சரியான வாசிப்பு வந்துவிடாது: எழுத்துகளையும் அவைகளின் ஒலிகளையும் கற்பித்தானதும், வாசிக்கக் கற்பித்தாய் விட்டதென்று எண்ணக்கூடாது. இங்கிலீஷ் பாஷையிலுள்ளது போலத் தமிழ்ப் பாஷையில் ஒரே எழுத்துக்குப் பல்வேறு ஒலிகளில்லாவிட்டாலும், வார்த்தைகளில் இருக்குமிடத்திற்குத் தக்கபடி, எழுத்துகளுக்குச் சொற்ப ஒலி வித்தியாசம் ஏற்படும். அப்பேர்ப்பட்ட ஒலி வித்தியாசங்களை வாசிக்கக் கற்பிக்கையில் உபாத்தியாயர் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டும்.

2. எழுத்துகளுக்கு இடத்துக்குத் தக்கபடி சொற்ப ஒலி வித்தியாசங்கள்: (i) க, த என்ற எழுத்துகளுக்கு, மொழி முதலில் வரும்போது உள்ள ஒலிகளுக்கும், இடை கடைகளில் வரும்போது உள்ள ஒலிகளுக்கும் சொற்ப வித்தியாசமுண்டு. கதவு, பகல், தலை—இந்த வார்த்தைகளிலுள்ள க, த எழுத்துகளின் ஒலி வித்தியாசங்களைக் கவனியுங்கள்.

(ii) சில மொழிகளின் கடையில் உகரமும் இகரமும் குறுகி, குற்றியலுகரமாகவும் குற்றியலிகரமாகவும் ஆகின்றன. (உ - ம்) குலே என்பதில் கு வுக்கு முழு உகர ஒலியுண்டு. பாக்கு என்பதில் கு குற்றியலுகரம்.

(iii) வற்றல், காற்ருடி, புற்று—ற்ற, ற்ரு, ற்று, முதலிய கூட்டுகளின் ஒலிகள் தனித்தனியாகவுள்ள ஒலிகளிரண்டையும் சேர்த்த ஒலிகளல்ல. ற் என்ற எழுத்தினுடையவும் று என்ற எழுத்தினுடையவும் ஒலிகளைச் சேர்ப்பதால், ற்று என்ற கூட்டின் ஒலி வராது. இவ்வாசிரியர் வாசக புஸ்தகத்தில் இந்தக் கூட்டுகளின் ஒலிகளை விளக்குவதற்காக 31-ஆம் பக்கத்தில் சில வார்த்தைகள் போடப்பட்டிருக்கின்றன.

3. எழுத்துகளைச் சேர்த்துச் சேர்த்துக்கூட்டி வாசித்தல் சரியான வாசிப்பல்ல: (i) காக்கை — என்பதை, கா, க் — காக்; கை—காக்கை, என்று வாசிப்பது சரியான முறையல்ல. பழைய முறையில் ஒலி பிரித்தல் என்ற தனிப்பாடம் இல்லாததால், இவ்வாறு சேர்த்துச் சேர்த்து வாசிக்கக் கற்பித்தார்கள். ஒலி பிரித்தல் என்ற அப்பியாசத்தில் பழகின பிள்ளைகளுக்கு, கா, க், கை என்று 3 ஒலிகளையும் சொல்லி, ஒரே யடியாய் காக்கை என்று சொல்ல முடியும்.

(i) 4 எழுத்துகளையுடைய கண்ணுடி என்ற வார்த்தையைக்கூட, க, ண், ணு, டி—என்று 4 ஒலிகளையும் ஒன்றின்பின்னென்ருகச் சொல்லிச் சேர்த்து, கண்ணுடி என்று சொல்லக் கற்பிக்கலாம்.

4. நீளமான வார்த்தைகளை வாசிக்கக் கற்பித்தல்: (i) வாழைக்காய் என்ற வார்த்தையை வாசிக்கக் கற்பிக்கும்போது, பிள்ளைகள் கைவிரலால் வா, ழை, க், கா, ய் என்ற எழுத்துகளைக் காண்பித்துக்கொண்டே போகட்டும். உபாத்தியாயர் ஒலிகளைச் சொல்லிக்கொண்டே போய் முடிவில் சேர்த்து வாசிக்கட்டும். பிள்ளைகள் திரும்ப வாசிக்கட்டும்.

(ii) நீளமான வார்த்தைகள் வாசக பாடத்தில் வந்தால், அவைகளைப் பெரிய எழுத்துகளில் கரும்பலகையில் எழுதிப் பிள்ளைகளை ஒவ்வொரு எழுத்தாய்த் தொட்டு வாசிக்கச் செய்ய வேண்டும். பிறகு அவர்கள் வாசக புஸ்தகத்தில் அதே வார்த்தையை வாசிக்கவேண்டும்.

5. வாசித்துக் காட்டிய பிறகு, பிள்ளைகளை வாசிக்கச் சொல்லவும்: முதல் மூன்று வகுப்புகளில் ஒவ்வொரு வாக்கியத்தையும் உபாத்தியாயர் வாசித்துக் காட்டிய பிறகு, பிள்ளைகளை வாசிக்கச் சொல்வதே உத்தமம். பிள்ளைகளாகவே எழுத்துக் கூட்டி வாசிப்பதால் அவர்களுக்கு நன்மை உண்டாகிறதென்று எண்ணவேண்டாம். பிள்ளைகள் சிரமப்படுவதைத் தவிர, அவர்களுக்கு நன்மை உண்டாகிறதில்லை என்பது ஆராய்ச்சியால் கண்டுபிடிக்கப்பட்ட உண்மை.

6. நாம் எதனல் வேகமாக வாசிக்கிறோம்? நாம் வாசிக்கும்போது ஒவ்வோரெழுத்தாய்க் கவனித்துப் பார்த்துக்கூட்டி வாசிக்கிறோமென்று நினைக்கிறீர்கள்? இல்லவேயில்லை. ஒவ்வொரு வார்த்தையின் உருவத்தை ஏதோ ஒரு விதத்தில் மொத்தமாய்க்கவனித்து, அதற்குத் தகுந்த வார்த்தையை வாயால் சொல்கிறோம். ஆகையால்தான் சில எழுத்துகள் விட்டிருந்தாலும் சில எழுத்துகள் தப்பாயிருந்தாலும் நாம் அந்தக் குற்றங்களைக் கவனியாமல் நீள வாசித்துக் கொண்டு போகிறோம். இவ்வாறு வாசிப்பதால்தான் வேகமாய் வாசிக்கமுடிகிறது.

7. ஒவ்வொரு வார்த்தையின் உருவமும் மொத்தமாய் மனதிற் பதியவேண்டும்: நமது மனதில் அநேக வார்த்தைகள் இருக்கின்றன. கண்ணெதிரில் அச்சிடப்பட்டதை மொத்தமாய்ப் பார்த்து நமது மனதிலுள்ள இன்ன வார்த்தையென்று கண்டுபிடித்து அவ்வார்த்தையைச் சொல்கிறோம்.

அது போலவே பிள்ளைகளும் எழுதியுள்ள ஒரு வார்த்தையை மொத்தமாய் பார்த்து இன்ன வார்த்தையென்று கண்டுபிடித்துச் சொல்லவேண்டும். இந்தச் சக்தி சீக்கிரத்தில் உண்டாவதற்கு, உபாத்தியாயர் வார்த்தைகளைக் காட்டி, அவைகளை வாசித்துக் காட்டுவதே தகுந்த முறை.

8. வார்த்தையின் எழுத்தமைப்பைப் பற்றின முழு அறிவு வார்த்தையை எழுதும்போது உண்டாகும்: ஒருவர் மாதிரி சித்திரம் எழுதவேண்டுமானால், அவர் கண்கள் எப்படி யிருக்கின்றன, மூக்கு எப்படி யிருக்கிறது, முகத்தின் சரியான உருவமென்ன என்பவற்றைச் சூக்ஷ்மமாகப் பார்த்துச் சித்திரமெழுதுகிறோம். அதே மாதிரி, ஒரு வார்த்தையை எழுதும்போது, எழுத்தெழுத்தாய்க் கவனிக்கிறோம். வாசிக்கவும் எழுதவும் பழகினால் ஒரு வார்த்தையைப்பற்றின பூரண அறிவு ஏற்படும்.

அத்தியாயம் 17

அர்த்தஞானம்

1. எதற்காக வாசிப்பது? வாசிப்பதின் நோக்கம் எழுதியுள்ளதின் அர்த்தத்தை மனதில் வாங்கிக்கொள்வதற்காக அல்லவா? சிலர் வாசித்துக்கொண்டே போகிறார்கள், சொல்லியிருப்பது என்ன, என்று கேட்டால், அவர்களுக்குத் தெரிகிறதில்லை. இந்த மாதிரி ஏற்படாமல், பிள்ளைகளுக்கு வாசிக்கும்போதே அர்த்தத்தைக் கவனிக்கவேண்டும் என்று முதல் முதற்கொண்டே சொல்லவேண்டியது அவசியம்.

2. வாசித்ததில் சொல்லியிருப்பது என்ன?: பிள்ளைகள் புஸ்தகத்தில் ஒரு வாக்கியத்தை வாசித்தவுடன், அவர்களை அந்த வாக்கியத்தில் சொல்லியிருக்கும் விஷயமென்ன என்று கேட்கவேண்டும். ஒரு தரம் வாசித்தவுடன் புரியாவிட்டால், திரும்ப வாசிக்கவேண்டும், அல்லது விளக்கும்படி பெரியவர்களைக் கேட்கவேண்டும். அர்த்தமாகாமல் இருக்கும்பொழுது மேலே வாசித்துக்கொண்டு போகக்கூடாது. இந்தப் பழக்கம் ஆதியிலிருந்தே பிள்ளைகளுக்கு உண்டாகவேண்டும்.

3. அட்டையில் வாக்கியங்களை எழுதிக் காண்பித்தல் (Flash Cards): அட்டைகளில் வாக்கியங்களை எழுதி, பிள்ளைகளுக்குக் காட்டி, பிறகு மறைத்துவைத்துவிட்டு, அந்த வாக்கியங்கள் பிள்ளைகளுக்குப் புரிந்ததா, என்று பரீக்ஷிப்பது, ஒரு உபயோகமுள்ள பரீக்ஷையாகும். பூனைக்குக் கால் நான்கு, நாளைக்குப் பள்ளிக்கூடம் இல்லை, ஓடி விளையாடு—இந்த மாதிரி வாக்கியங்களை அட்டைகளில் எழுதிக் காண்பித்து, எழுதியிருந்தது என்ன? திருப்பிச்சொல், எழுது—என்று கேட்கலாம். கரும் பலகையில் எழுதிக் காண்பித்து, பிறகு அழித்துவிட்டு, என்ன எழுதியிருந்தது என்று கேட்கலாம்.

4. இன்னது செய்யவேண்டுமென்று அட்டையில் எழுதிக் காண்பித்தல்: வாசகத்தை எடுங்கள், எழுந்திருங்கள், வரிசையாக நில்லுங்கள், ராமா இங்கே வா, இவ்வாறு கட்டளைகளை எழுதிக் காண்பித்து, பிள்ளைகள் படித்து அறிந்துகொண்டு, அந்தப் பிரகாரம் செய்கிறார்களா, என்று பார்க்கலாம்.

5. அர்த்தம் விளங்கும்படி வாசித்தல்: (i) வாசிக்கும்போது சில இடங்களில் நிறுத்தவேண்டும், சில வார்த்தைகளைச் சேர்த்து வாசிக்கவேண்டும், என்று காட்டவும்.

(ii) அர்த்தம் விளங்குவதற்கு, சேர்க்கவேண்டிய வார்த்தைகளைச் சேர்த்தும், வேண்டிய இடங்களில் நிறுத்தியும் வாசிக்கவேண்டுமென்று பிள்ளைகள் மனதில் பதிந்தால் நாளடைவில் அவர்கள் சரியான முறையில் வாசிப்பார்கள். மேல்வகுப்புப் புஸ்தகங்களில், நிறுத்தல் குறிகள் போட்டிருக்கும். அவைகள் வாசிப்பதற்கு உபயோகமான குறிகள்.

அத்தியாயம் 18
பேச்சுத்திறமை

1. பேசக் கற்பிப்பதின் முக்கியம்: வாசிக்கவும் எழுதவும் கற்பிப்பதற்குத் தகுந்த முறைகள் இதுவரையில் சொல்லப்பட்டன. பாலர்களுக்கு நன்குய்ப் பேசக் கற்பிப்பதை, வாசிக்கக் கற்பிப்பதைவிட முக்கியமான வேலையாக உபாத்தியாயர் கருத வேண்டும்.

2. தாராளமாய்ப் பேசுதல்: பிள்ளைகள் கேட்ட கேள்விகளுக்குத் தாராளமாய் விடைகள் சொல்ல வேண்டும். பார்க்கும் விஷயங்களைப் பற்றிச் செவ்வையாய்ப் பேச வேண்டும்.

3. தெளிவாய்ப் பேசுதல்: சில பிள்ளைகள் வார்த்தைகளை வாய்க்குள்ளே சொல்லிக் கொள்வார்கள். ஒரு வார்த்தையையும் விழுங்கி விடாமல் பிறருக்குப் புரியும்படித் தெளிவாய்ப் பேசும்படிப் பழக்க வேண்டும்.

4. கொச்சையின்றிப் பேசுதல்: பிள்ளைகளுடைய கொச்சையான வார்த்தைகள் திருத்தப்பட வேண்டும்.

5. இலக்கண முறையும் பேச்சு முறையும்: (i) சில வார்த்தைகளுக்கு இலக்கண முறை வேறு, பேச்சு முறை வேறு, என்று இருந்தால், பேச்சு முறையை ஒத்துக்

கொண்டு அதற்கு இலக்கண முறை இன்னதென்று கற்பித்தல் நலம். உதாரணமாக, ஆச்சு, ஆயிற்று; போறேன், போகிறேன்.

(ii) சில வார்த்தைகளில் பேச்சு முறையைத் திருத்துவது அவசியம். நன்னுய் இருக்கு என்பதை நன்ருய் இருக்கிறது என்று திருத்த வேண்டும்.

(iii) ழ, ள, ல என்ற ஒலிகளைக் கூடியவரையில் வித்தியாசங்களை எடுத்துக் காட்டிக் கற்பிக்க வேண்டும். சில பிள்ளைகளுக்கு வித்தியாசப்படுத்திப் பேசத் தெரியாவிட்டால், நாக்கு எங்கெந்த ஸ்தானங்களில் இருக்கவேண்டுமென்று காண்பிப்பதன் மூலமாய் அவர்களைத் திருத்தலாம்.

6. புதிய பாட அட்டவணையில் சொல்லியுள்ள விஷயங்கள்: பேசக் கற்பிப்பதில் உபாத்தியாயர் கவனிக்கவேண்டிய விஷயங்களைப் பற்றிக் கீழே கண்டபடி, சர்க்காரால் பிரசுரிக்கப்பட்ட புதிய பாட அட்டவணையில் சொல்லப்பட்டிருக்கிறது.

7. புதிய பிள்ளைகளின் கூச்சத்தைத் தெளிவித்தல்: புதிதாகப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படும் பிள்ளைகளிடம் பிரியமாகப் பேசி அவர்களுடைய கூச்சத்தைத் தெளிவிக்க வேண்டியது உபாத்தியாயருடைய முதல் வேலையாகும். பல விஷயங்களைப் பற்றிச் சம்பாஷிப்பதாலும், பல கதைகளைச் சொல்வதாலும் பிள்ளைகளிடம் ஸகஜமாய்ப் பேசும்படியான தைரியத்தை உண்டாக்க வேண்டும்.

8. தெளிவாகப் பேசக் கற்பித்தல்:—இவ்வாறு இரண்டொரு மாதங்கள் சென்று, பிள்ளைகள் தாராளமாய்ப் பேச ஆரம்பித்த பிறகு அவர்களை ஸ்பஷ்டமாயும், பிழைகளில்லாமலும், இயற்கையாகவும் பேசும்படியாகப் பழக்க வேண்டும்.

பேசும்போது வார்த்தைகளின் கடைப்பாகத்தை விழுங்கி விடுவார்கள். ஒலிகளை விட்டு விடுவார்கள். பேச்சு சுத்தமிராது. இந்த மாதிரிக் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

9. சரியான வார்த்தைகளை உபயோகித்துச் சிறிய வாக்கியங்களாக அமைத்துப் பேசுதல்: கொச்சையானதும் தகுதியாக இல்லாததுமான வார்த்தைகளைத் திருத்தவேண்டும். சொல்வதைச் சிறிய வாக்கியங்களாக அமைத்தும் பிறருக்கு நன்ருய் விளங்கும்படியும் சொல்லக் கற்பிக்கவேண்டும்.

10. சம்பாஷணைக்குரிய விஷயங்கள்:

(i) கதைகள்-உபாத்தியார் கதை சொல்லுதல் - பிள்ளைகள் கதை சொல்லுதல்.

(ii) பாட்டுகள் - பாப்பா பாட்டுகள் - அபிநயப் பாட்டுகள் - செய்கைப் பாட்டுகள்.

(iii) வீடு - குடும்பம் - வேலைகள் - வேடிக்கை விளையாட்டுகள்.

(iv) பள்ளிக்கூடம் - உபாத்தியாயர் - பிள்ளைகள் - படங்கள் - பள்ளிக்கூட வேலைகள் - வேடிக்கை விளையாட்டுகள்.

(v) நல்ல நடத்தை.

(vi) தேக ஆரோக்கியம்.

(vii) ஜந்துக்கள் - வளர்க்கும் ஜந்துக்கள் - பார்க்கும் ஜந்துக்கள்.

(viii) மரம் செடிகள் - ஊரிலுள்ள மரம் செடிகள்.

(ix) பண்டிகைகள் - திருவிழாக்கள்.

அத்தியாயம் 19

உபகரணங்கள்

பாலர்களுடைய தமிழ்ப் பாட சம்பந்தமாய்க் கீழே கண்ட உபகரணங்கள் அவசியமானவை.

1. பல வஸ்துக்களின் படங்கள் :
2. பெரிதாக அச்சிடப்பட்ட வார்த்தைகள்.
3. கதைப் படங்கள்.
4. தனி எழுத்துகள்.
5. பலவிதமான எழுத்து அட்டவணைகள்.
6. சிறு வாக்கியங்கள் அச்சிட்டுள்ள அட்டைகள்.
7. எழுத்துகளின் உருவங்களை அமைப்பதற்கு வேண்டிய சாதனங்கள்.
8. விரலால் வரைந்து எழுதப் பழகுவதற்கு வேண்டிய சாதனங்கள்.

இரண்டாம் பாகம்

ஆனந்த வாசக விளக்கம்

அத்தியாயம் 20

ஆனந்த வாசகம் பக்கங்கள் (5-10)

படங்களைப்பற்றிய சம்பாஷணை

இந்த அத்தியாயத்திலும் பின்வரும் அத்தியாயங்களி லும், இவ்வாசிரியருடைய ஆனந்த வாசகம் முதல் புஸ்தகத்தி லுள்ள பாடங்களைக் கற்பிக்கும் முறைகள் விவரிக்கப்படும்.

1. ஆரம்பப் பாடங்கள்: வாசக புஸ்தகத்தில் முதல் சில பக்கங்களில் படங்கள் போடப்பட்டு அவைகளுக்குக் கீழே பெயர்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. இம்மாதிரி 5-ஆம் பக்கம் முதல் 10-ஆம் பக்கம் வரை, 6 பக்கங்கள் இருக்கின்றன.

2. ஆரம்பப் பாடங்களின் நோக்கங்கள்:

முதலாவது, படங்களின் பெயர்களைப் பிள்ளைகள் சொல்லுதல்.

இரண்டாவது, படங்களைப்பற்றி உபாத்தியாயரும் பிள்ளைகளும் சம்பாஷித்தல்.

மூன்றாவது, கீழே அச்சிடப்பட்ட வார்த்தைகளை மொத்தமாய்ப் பிள்ளைகள் அறிந்துகொள்ளுதல். இந்த நோக்கங்கள் ஒவ்வொன்றையும் பற்றின முறைகள் கீழே விவரிக்கப்படும்.

3. முதல் நோக்கம்—படங்களின் பெயர்களைச்சொல்லு தல் : (i) அச்சிடப்பட்ட பெயர்களைப் பிள்ளைகள் சொல்லா விட்டால், அச்சிடப்பட்ட பெயர்களைச் சொல்லிக் கொடுங்கள். உதாரணமாக, தனியான ஒரு கிளிப்படமும், கூண்டிற்குள் ளுள்ள ஒரு கிளிப்படமும் போடப்பட்டு, கிளி என்றும், கூண்டு என்றும் பெயர்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. கூண் டிற்குள் கிளியிருக்கும் படத்தைப் பார்த்துப் பிள்ளைகள் கிளி என்று சொன்னுல், "சரி, கிளி ஒன்று இருக்கிறது. அது கூண்டிற்குள்ளே இருக்கிறது பார். கூண்டு என்று சொல்." என்று கற்பிக்கவும்.

(ii) வேண்டுமான புது வார்த்தைகளைக் கற்பியுங்கள் பல்லியின் படத்தைப்போட்டு, கௌளி என்ற பெயர் அச்சிடப்பட்டிருக்கிறது. படத்தைப் பார்த்துப் பிள்ளை கள் பல்லி யென்றுதான் சொல்லுவார்கள். "பல்லி யைக் கௌளி என்றும் சொல்வதுண்டு - இங்கே அச்சிடப் பட்ட வார்த்தை கௌளி" என்று கற்பிக்கவும். ஔவையின் படத்தைப் பார்த்துப் பிள்ளைகள் பாட்டி என்று சொல்லலாம். "இந்தப் பாட்டி அதிகமான புத்தியுடையவர். பாட்டி என்ன செய்துகொண்டிருக்கிருர், பார். இந்தப் பாட்டியின் பெயர் ஔவை" என்று சொல்லவும்.

(iii) சாத்தியப் பட்டவரையில், வஸ்துக்களைக் கொண்டு வந்து காட்டுங்கள்: ஆணி, ஊதல், கடிகாரம், கூண்டு, கெட்டில், கை—இந்தப் படங்களைக் கற்பிக்கும் போது, வஸ்துக்களைக் காட்டவேண்டும். ஈட்டி, உரல், ஏற்றம் —இவைகள்மாதிரி செய்துவைத்த உருவங்களைக் காட்ட வேண்டும். அணில், எலி, ஒட்டகம், ஓணன், காக்கை, கிளி, குதிரை, கொக்கு, கோழி—இவைகள்மாதிரி செய்துவைத்த பொம்மைகளைக் காட்டவேண்டும்.

(iv) 5 நட்சத்திரங்கள் போடப்பட்டு, ஐந்து என்று அச்சிடப்பட்டிருக்கிறது. நட்சத்திரப் புள்ளிகளை, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, என்று எண்ணக் கற்பியுங்கள். எண்ணி ஐந்து என்று சொல்லக் கற்பியுங்கள்.

4. 2-ஆம் நோக்கம் - படங்களைப் பற்றிய சம்பாஷணை :

(i) அணில் - படத்தைக் காட்டி, "அணில் என்ன செய்துகொண்டிருக்கிறது?" என்று கேட்டு "உட்கார்ந்திருக்கிறது. தின்று கொண்டிருக்கிறது" என்ற விடைகளை வரவழைக்கவும். அது உட்கார்ந்து தின்று கொண்டிருக்கிற மாதிரி பிள்ளைகளை நடித்துக்காட்டச் சொல்லவும். அதன் முதுகு கோடுகளையும், மீசை மயிர்களையும் வாலையும் பார்க்கச் சொல்லவும். பிள்ளைகளை வெளியில் அழைத்துக்கொண்டு போய் அணிலைக் கவனமாய்ப் பார்க்கச் சொல்லவும்.

(ii) ஆணி—இரண்டு வகை ஆணிகள் காட்டப்பட்டிருக்கின்றன. இரண்டுவகை ஆணிகளையும் கொண்டுவந்து அவைகள் ஒவ்வொன்றும் எப்படி உள்ளே இறங்குகின்றன என்று காட்டவும்.

(iii) இஞ்சி கொத்தாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இஞ்சிக் கொத்தையாவது மஞ்சட் கொத்தையாவது பிள்ளைகளுக்கு எப்பொழுதாயினும் காண்பிக்கவேண்டும். சுக்கைக் கொண்டுவந்து, அது காய்ந்த இஞ்சி என்பதைச் சொல்லவும்.

(iv) ஈட்டி மாதிரி செய்துள்ளதைக் காட்டி, ஈட்டியை வைத்துக்கொண்டு எப்படி சண்டை போடுவார்கள் என்று காண்பிக்கவும். கிராமக்கோயிலில் ஈட்டி இருந்தால் பிள்ளைகளை அழைத்துக் கொண்டுபோய்க் காண்பிக்கவும்.

(v) உரல் - நெல்லை உரலில் குற்றினால் உமி தவிடு நீங்கி, அரிசி தனியாக வருகிறது, என்பதைக் காட்டவும்.

(vi) ஊதல் — ஊதலைக் கொண்டுவந்து, ஊதிக் காண்பிக்கவும். பூவரச இலையால் ஊதல் செய்து காண்பிக்கவும்.

(vii) எலி—கீரி—அணிலுக்கும், எலிக்கும், கீரிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றிச் சம்பாஷிக்கவும்.

(viii) ஏற்றம் — பிள்ளைகளைத் தோட்டத்திற்கு அழைத்துக் கொண்டுபோய், ஏற்றம் தண்ணீரை மேலே கொண்டு வருவதைக் காண்பிக்கவும்.

(ix) ஒட்டகம்—பிள்ளைகள் ஒட்டகத்தைப் பார்த்திராவிட்டால், பெயரை நீங்களே சொல்லி அதைப்பற்றின விநோதமான விஷயங்களைக் கற்பிக்கவும்.

இவ்வாறு மற்றப் படங்களைப்பற்றியும், பிள்ளைகளுடன் சம்பாஷிக்கவேண்டும்.

5. 3-ஆம் நோக்கம்-அச்சிட்ட வார்த்தைகளை மொத்தமாய் அறிதல்.

(i) படங்களின் கீழே அச்சிட்ட வார்த்தைகளைக் காட்டி, இவைகள் அந்தப் படங்களின் பெயர்களென்று சொல்லி, "வார்த்தைகளைக் கவனித்துப் பாருங்கள்" என்று சொல்லவும்.

(ii) 4 வார்த்தைகளானதும், அந்த வார்த்தைகளை அச்சிட்ட அட்டைத்துண்டுகளைக் காட்டி, இது என்ன, இது என்ன, என்று கேட்கவும். இந்தக் கேள்விகளுக்கு விடையளிக்கும் போது, வேண்டுமானால் பிள்ளைகள புஸ்தகத்தைப் பார்த்துச் சொல்லலாம்.

(iii) படங்களையும் வார்த்தைகளையும் கொடுத்து ஒன்றோடொன்றைச் சரியாகச் சேர்த்துவைக்கச் சொல்லவும். (Matching the picture and the printed word)

அத்தியாயம் 21

பக்கங்கள் (11-23)—வார்த்தைகளும் எழுத்துகளும்

விஷய சூசிகை

பாடங்கள்	வார்த்தைகள்	எழுத்துகள்
(i) 1 பாடம்	ட, ப, ம, எழுத்துகளையுடைய 2 வார்த்தைகள்	
(ii) 3 பாடங்கள்	அ முதல் ஔ வரை முதலாக வுள்ள 12 வார்த்தைகள்	(i) 12 உயிரெழுத்துகள் (ii) 18 மெய்யெழுத்துகள் (iii) 4 வரிசைஉயிர் மெய்கள்
(iii) 1 பாடம்	ங, ய, ழ, ள, எழுத்துகளையுடைய 4 வார்த்தைகள	
(iv) 3 பாடங்கள்	க முதல் கௌவரை முதலாகவுள்ள 12 வார்த்தைகள்	உயிர் மெய்களின் எல்லாவரிசைகளும்.

இந்த 8 பாடங்களிலுள்ள 30 வார்த்தைகளைக் கொண்டு, எல்லாத் தமிழெழுத்துகளும் கற்பிக்கப்படுகின்றன.

(v) தவிர, 2 பாடங்களில், 5 வார்த்தைகளைக் கொண்டு தமிழில் வரும் வடமொழி எழுத்துகள் கற்பிக்கப்படுகின்றன.

மொத்தம் — பாடங்கள் 10,
வார்த்தைகள் 35.

ஒவ்வொரு பாடத்தையும் கீழே விவரித்துள்ள 7 படிகளில் நடத்தவேண்டும்.

I.

ட, ப, ம.

முதல் படி: படங்களைப் பார்த்து, பட்டம், பாப்பா, என்ற பெயர்களைச் சொல்வது.

2 ஆம் படி: அச்சிட்டிருக்கும் பட்டம், பாப்பா என்ற வார்த்தைகளை மொத்தமாய்த் தெரிந்து கொள்வது.

3 ஆம் படி: வாயால் வார்த்தைகளை ஒலி பிரித்தல்.

(i) பட்டம் என்ற வார்த்தையை ஒலி பிரிக்கும்போது, பிள்ளைகள், ப - ட - ம் என்று சொல்வார்கள் நடு ஒலி ட மாத்திரமல்ல, ட், ட என்ற இரண்டு ஒலி சேர்ந்தது என்று காண்பிக்க வேண்டும். நாக்கை நன்றாய் மடக்கி மேல் வாயில் அழுத்துவதால் ட் என்ற ஒலி உண்டாவதைக் காண்பிக்கவும். ட், ட என்ற இரண்டு ஒலிகளையும் ஒன்றுக்குப் பின்னொன்றாய் உச்சரித்துக் காட்டவும். தனி ட வையும், ட்ட வையும் உச்சரிக்கச் செய்யவும்.

(ii) பாப்பா - என்ற வார்த்தையை, இவ்வாறே பா - ப் - பா என்று ஒலி பிரிக்கச் செய்யவும். பிறகு ப விற்கும் பா விற்கும் குறுகல், நீட்டல், என்ற ஒலி வித்தியாசத்தைக் காட்டவும்.

4 ஆம் படி: ஒவ்வொரு எழுத்தையும் காட்டி அதன் ஒலியைக் கற்பித்தல்: (i) பட்டம என்று எழுதியிருப்பதில் எழுத்தெழுத்தாய்த் தொட்டு, இது ப, இது, ட், இது ட, இது ம், என்று பிள்ளைகள் சொல்லவேண்டும். அதே மாதிரி பாப்பா என்று எழுதியிருப்பதில், இது பா, இது ப், இது பா, என்று சொல்லவேண்டும். ஏற்கனவே, 3 ஆம் படியினுல் ஒலி பிரிக்கத் தெரிந்துவிட்டதால், இன்ன எழுத்துக்கு

இன்ன ஒலியென்று தெரிந்துகொள்வது பிள்ளைகளுக்குச் சுலபமாயிருக்கும்.

(ii) பா என்று எழுதியிருப்பதில், 2 அடையாளங்களும் சேர்ந்து ஒரு எழுத்து என்பதையும் அதற்கு பா என்று நீண்ட ஒலி என்பதையும் கற்பிக்கவும்.

5 ஆம் படி—சேர்க்கை யெழுத்துகளாய் உள்ளவைகளைப் பிரித்தல்: (i) ப, ப், பா என்று ப சம்பந்தமாய் 3 எழுத்துகள் வந்திருப்பதைக் காண்பித்து, அவைகளின் உருவ வித்தியாசங்களைக் காட்டவும்.

(ii) ப வின் மேல் புள்ளி குத்தினால் ப் என்றும், ப விற்குப்பின் கால் வாங்கினால் பா என்றும், ஆவதைக் காட்டவும்.

(iii) ம் என்கிற எழுத்து, ம என்ற எழுத்தின்மேல் புள்ளி குத்துவதால் உண்டான எழுத்து என்பதைக் கற்பிக்கவும். ப, ம் என்ற எழுத்துக்களை எழுதிக்காட்டி, உருவ வித்தியாசத்தைக் காட்டவும்.

(iv) ப, பா என்று உள்ள மாதிரி, ம, மா என்று உண்டு என்பதைக் காட்டி, மா என்பதின் ஒலியைக் கற்பிக்கவும்.

6 ஆம் படி—எழுத்து அட்டவணை உண்டாக்குதல்: (i) 11 ஆம் பக்கத்தில் கோட்டிற்குக் கீழ் போட்டுள்ள எழுத்து அட்டவணையைப் பார்த்துப் பிள்ளைகள் விரலால் தொட்டுக்கொண்டு,

ட ப ம
ட் ட டா
ப் ப பா
ம் ம மா

} என்று பலதடவை சொல்லிப் பழகட்டும்.

(ii) ட விலிருந்து ட், ப விலிருந்து ப், ம விலிருந்தும், எப்படி உண்டாகின்றன? என்று கேட்கவும்.

(iii) டவிலிருந்து டா, ப விலிருந்து பா, ம விலிருந்து மா, எப்படி உண்டாகின்றன? என்று கேட்கவும்.

7ஆம் படி — எழுதக்கற்றுக்கொள்ளும் அப்பியாசங்கள் :

(i) உருவமைத்தல் :

ட என்பதின் உருவத்தை 2 குச்சிகளால் உண்டாக்கலாம். ப என்பதின் உருவத்தை 3 குச்சிகளால் உண்டாக்கலாம். ம என்பதின் உருவத்தை 2 குச்சிகளாலும் ஒரு வளைந்த கம்பியாலும் உண்டாக்கலாம். குச்சிகளையும் வளைந்த கம்பியையும் பிள்ளைகளுக்குக் கொடுத்து, அவர்களை ட, ப, ம என்ற உருவங்களை உண்டாக்கச் சொல்லவும்.

(ii) வரைதல் :

ஒரு பலகையில் பள்ளமாய்ச் செதுக்கியாவது, அல்லது ஒரு பலகையின்மேல் மேடாய்ச் செய்தாவது, அல்லது ஒரு பலகையிலோ தகரத்திலோ பட்டையாய் வரைந்தாவது, உள்ள ட, ப, ம, ர, என்ற உருவங்களின் மேல் பிள்ளைகள் அடிக்கடி கைவிரலால் வரைந்து பழகவேண்டும். எழுதப் பழகுதல் என்ற அத்தியாயத்தில், சொல்லப்பட்ட உருவமைத்தல், விரலால் வரைதல், பென்சிலால் எழுதுதல் என்ற 3 அப்பியாசங்களில் கடைசி அப்பியாசம் ஆரம்பத்தில் பிள்ளைகளுக்குக் கொடுக்கத் தகுந்ததல்ல.

II

உயிரெழுத்துகளும் சில மெய்யெழுத்துகளும் :

(i) 12 உயிரெழுத்துகளையும் முறையே முதலாகவுடைய 12 வார்த்தைகள் 3 பாடங்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

(ii) உயிரெழுத்துகளைத் தவிர, இந்த வார்த்தைகளில் வரும் மெய், உயிர்மெய் எழுத்துகளையும் கற்பிக்கவேண்டும்.

(iii) இந்தப் பாடங்களுக்கும் 7 படிகள் உண்டு

1. படவாசிப்பு
2. அச்சிட்ட வார்த்தையை மொத்தமாய் அறிதல்
3. ஒலி பிரித்தல்
4. எழுத்துகளும் ஒலிகளும்
5. கூட்டெழுத்துகளைப் பிரித்துக் காட்டல்
6. மெய்யெழுத்துகளும் அமுதல் ஈ வரை ஏறிய 4 வரிசை உயிர்மெய்களும்
7. உருவமைத்தல், விரலால் வரைதல்.

III

பாக்கியுள்ள 4 மெய்யெழுத்துகள் ;

ங், ய, ழ, ள, என்ற 4 மெய்யெழுத்துகள் தான் கற்பிக்கவேண்டிய பாக்கி எழுத்துகள். அவைகளுக்குக்காகவென்று ஒரு தனிப் பாடமாக சங்கிலி, பழம், குயவன், மத்தளம் என்ற 4 வார்த்தைகள் கற்பிக்கப்படுகின்றன. இந்தப் பாடத்திற்கும் 7 படிகள் உண்டு.

IV

உயிர்மெய்களின் 12 வரிசைகள் :

இதுவரை 12 உயிரெழுத்துகளும், 18 மெய்யெழுத்துகளும், அவைகள் சம்பந்தமான அகர, ஆகார, இகர, ஈகார, உயிர்மெய்களும் கற்பிக்கப்பட்டன.

இப்பொழுது ககர வரிசையில் 12 உயிர்மெய்யெழுத்துகளை முதலெழுத்துகளாகவுடைய 12 வார்த்தைகளை ஆதாரமாகக் கொண்டு, பூர்த்தியாக 12 உயிர்மெய் வரிசைகளும் கற்பிக்கப்படுகின்றன.

V

வடமொழி எழுத்துகள் :

வடமொழி எழுத்துகளைக் கற்பிப்பதற்கு, படங்களுடன் 5 வார்த்தைகளும், அப்பியாசத்திற்காக 21 வார்த்தைகளும்

அச்சிடப்பட்டிருக்கின்றன. இந்தப் பாடங்களுக்கும் 7 படிகள் உண்டு.

அத்தியாயம் 22

வாசக பக்கங்கள் (24-31) அப்பியாச பாடங்கள்

1. ஏற்கனவே சுருக்கமாகக் கற்பிக்கப்பட்டுள்ள உயிர்மெய்யெழுத்துகள் இப்பொழுது விஸ்தாரமாகக் கற்பிக்கப்படுகின்றன.

2. 24-ஆம் பக்கத்தில் ஆகார உயிர்மெய்கள் கற்பிக்கப்படுகின்றன. ஙதெந்த எழுத்துகளுக்குக் கால் வாங்குவதற்குப் பதிலாகச் சுற்றுக்கோடு போடவேண்டும், என்பதைப் பிள்ளைகளுக்குக் காட்டவேண்டும்.

3. 26-ம் பக்கத்திலுள்ள உயிர்மெய்யெழுத்துகளை எழுதி அப்பியாசம் செய்யும்போது, உகரத்திற்கு,

கு, மு, ரு, ழு, ளு - ஒரு மாதிரி அடையாளமும்,

ஙு, சு, பு, யு, வு,—வேறொரு மாதிரி அடையாளமும்,

நு. ணு, து, லு, று, னு—இன்னொரு மாதிரி அடையாளமும்,

டு——தனியான வேறு அடையாளமும்,

இருப்பதைப் பிள்ளைகளுக்குக் காட்டிக் கற்பிக்கவேண்டும்.

4. ஔகார உயிர்மெய்களில், 6 வார்த்தைகளை மாத்திரம் கற்பித்து, அவைகள் ஒவ்வொன்றையும் விளக்கச் சிறு வாக்கியங்கள் போடப் பட்டிருக்கின்றன.

5. 31-ஆம் பக்கத்தில் ற்ற, ன்ற, ட்ச, ஷ்ட என்ற எழுத்துச் சேர்க்கைகள் கற்பிக்கப்படுகின்றன.

அத்தியாயம் 23

வாசக பக்கங்கள் (32—48) **இலக்கிய பாடங்கள்**

1. இந்த இலக்கிய பாடங்கள் சிறுவர்களுக்குச் சுலப மாயும் ருசியாயும் இருக்கும்படியாகவும் அறிவை விர்த்தி செய்யும் படியாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

2. இப்பாடங்களில் அடங்கியுள்ளவை:—

பக்கம்	விஷயம்
	I. சொற்றொடர்கள்
32	நமது வீட்டைப்பற்றின வார்த்தைகள
33	நமது சாப்பாட்டைப் பற்றின வார்த்தைகள்
34	வர்ணங்கள், உலோகங்கள் சுவைகள்,
48	மாதங்கள், கிழமைகள், பண்டிகைகள்
	II. தொடர்ந்த பாடங்கள்
35	கைத்தொழில்கள்
36 37 38	காக்கை, நாய், பசு, ஆடு
41	தென்னை, வாழை
39,40, 47	கதைகள், விடுகதைகள்
42	பள்ளிக்கூடம்
43	நல்ல நடத்தை - புத்திமதிகள்
44, 45	பாட்டுகள்
46	தேக சௌக்கியம்

3. சர்க்கார் புது அட்டவணையில் என்னென்ன விஷயங்களைப்பற்றிப் பிள்ளைகளோடு சம்பாஷிக்கவேண்டுமென்று சொல்லியுள்ளதோ அவ்விஷயங்களனைத்தும் ஆனந்த வாசகத்தில் சுலபமான வாசக பாடங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

THE MODEL PRESS, G. T., MADRAS.

THE MODEL PRESS, G. T., MADRAS.